**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், திருப்புவனம்**

| | | | |
|---|---|---|---|
| 2024-ம் ஆண்டு மார்ச் மாதம் 26-ம் நாள் செவ்வாய்கிழமை வாதி தரப்பு 2-ம் சாட்சியின் வாக்கு மூலம் 1869ம் ஆண்டு சட்ட எண் 44வது பிரிவு 6(1)ன் பிரிவின்படி இளநிலை உதவியாளர் திரு.சிவா என்பவரால் உறுதி பிரமானம் செய்யப்படுகிறது. | | | |
| பெயர்: | துரை | தொழில் : | |
| த.பெ: | | சமயம் : | |
| கிராமம்: | | சாதி : | |
| வட்டம்: | | வயது: | |

**26.3.2024 OS No. 23/2019 வா.சா.2 துரை ஆஜர்**

**சாட்சி திரும்ப அழைக்கப்பட்டு 1,6,7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை :**

1. வாதி விஜயகிருஷ்ணன் எந்த சொத்திற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் வீட்டு மனைக்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். அந்த சொத்தின் சர்வே எண், விஸ்தீரணம் தெரியுமா என்றால் சர்வே எண்.166, விஸ்தீரணம் 1 1/4 ஏக்கர் ஆகும். எத்தனை செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்று தெரிந்து கொண்டேனா என்றால் 50 செண்ட் அல்லது 51 செண்டிற்கு வழக்கு தாக்கல் செய்துள்ளார். விஜயகிருஷ்ணனின் அப்பா பெயர் வேலுச்சாமி என்றால் சரிதான். உஷா,ரவி, ராஜா, செல்லம்மாள், செந்தில்குமார் ஆகியோர்கள் வாதியுடன் உடன் பிறந்தவர்கள் என்றால் சரிதான்.

2. வேலுச்சாமி அம்பலம் தன் மக்கள், மைனர்களை கட்டுப்படுத்தி 2.1.1975-ம் தேதி எம்.எஸ்.285 பூவந்தி கூட்டுறவு பால் வழங்கும் சங்கதிற்காக அப்போது தலைவரான முத்து என்பவருக்கு எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் அது தாவா சொத்து இல்லை. அது தாவா சொத்திற்கு கிழக்கே உள்ள சொத்தாகும். அதில் தெய்வேந்திரன், முருகேசன், காமராஜ் ஆகியோர்கள் வீடு கட்டி மாவு அரவை மில் வைத்துள்ளார். அதில் எத்தனை வருடங்களாக அவர்கள் அனுபவித்து வருகிறார்கள் என்றால் 30 வருடங்களாக அனுபவித்து வருகிறார்கள்.

3. தாவா சொத்தைதான் பால் கூட்டுறவு சங்கத்திற்கு எழுதிக்கொடுத்து இன்றுவரை கூட்டுறவு சங்கம் தாவா சொத்தில்தான் உள்ளது என்றால் இல்லை. வாதியின் தாயார் தாவா சொத்தை பால் கூட்டுறவு சங்கத்திற்கு எழுதிக்கொடுத்து இன்றுவரை கூட்டுறவு சங்கம் தாவா சொத்தில்தான் உள்ளது என்றாலும், நான் வழக்கிற்காக இல்லை என்று பொய்யாக சொல்கிறேன் என்றால் சரியல்ல.

**(4,5 பிரதிவாதிகள் தரப்பில் எந்த எடுத்துரைப்பும் இல்லாததால் குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.)**

Taken down by me in open court readover/ interpreted to the witness in Tamil and acknowledged by him/ her to be correct

District Munsif Cum Judicial Magistrate, Thiruppuvanam.